# மே - 26 - வெள்ளி

**புனித பிலிப்பு நேரி**

**நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!**
**(யோவா 17:21)**

## முதல் வாசகம் : பிலிப்பியர் 4 : 4 - 9

சகோதர சகோதரிகளே! ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள் மீண்டும் கூறுகிறேன், மகிழுங்கள். கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார். எதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்க ளைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும். இறுதியாக, சகோதர சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள். நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவை, என் வழியாய்ப் பெற்றுக் கொண்டவை, என்னிடம் கேட்டறிந்தவை, என்வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்பிடியுங்கள். அப்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடிருப்பார்“ என்றார்.

**பதில்பாடல் :** கடவுளே அனைத்துலகின் வேந்தர் நீரே

## நற்செய்தி : யோவான் 17 : 20 – 26

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, “அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக் காகவும் வேண்டுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும். நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள்மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும். ”தந்தையே, உலகம் தோன்றுமுன்னே நீர் என்மீது அன்புகொண்டு எனக்கு மாட்சி அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன். நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் என அவர்களும் அறிந்து கொண்டார்கள். நான் அவர்களோடு இணைந்திருக்கவும் நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன் இன்னும் அறிவிப்பேன்“ எனகிறார்.

**தியானம்:** படைக்கப்பட்ட நாம் அனைவரும் தம்முடன் இணைந்திருக்க வேண்டும் என்பதே கடவுளின் விருப்பமாக உள்ளது. கடலும் அலையும் இணைந்திருப்பதுபோல, பூவும், மணமும் இணைந்திருப்பதுபோல, மரமும் கிளையும் இணைந்திருப்பதுபோல நாமும் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்று தான் இணைந்திருக்கும் நிலையில் இருந்து விலகி சென்றால் அதன் மதிப்பும், தராதரமும் குறைந்து விடும். அவ்வாறுதான் எமது வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்களால் நாம் கடவுளை விட்டு பிரிந்து செல்வோமானால், எம் வாழ்வும் அஸ்த்தமனமாகிவிடும். இதனையே இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. யேசு இவ்வுலகில் வாழ்ந்த போது எத்தனை சோதனைகளை, கேலிகளை, கேள்விகளை, அவமானங்களை சந்தித்தார். அவற்றால் அவரது லட்சியம் பாதிப்படையவில்லை. யேசுவின் சீடர்கள் தாம் எதிர் கொண்ட எல்லா சவால்களையும் முறியடித்தார்கள். இது எவ்வாறு? அவர்கள் கடவுளுடன் இணைந்து இருந்தார்கள். ஒரு குடும்பம் இணைந்திருந்தால்தான் அதற்கு சிறப்பு. நாடு இணைந்து வாழ்ந்தால்தான் மக்கள் நலமுடன் வாழ முடியும். எனவே நாமும் கடவுளுடன் இணைந்து வாழ்வோம். அவர் அருளும் மீட்பை கண்டு கொள்வோம்.